# அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்
## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்)
## அவர்கள் இலண்டனிலுள்ள பைத்துல் புதூஹ் பள்ளிவாயிலில்
## 21.12.2012 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரை

**தசஹ்ஹுத் தஅவ்வுது மற்றும் சூரா ஃபாத்திஹாவை ஓதிய பிறகு ஹுஸுர் அவர்கள் கூறினார்கள்:**

நன்றி செலுத்துவதைப் பற்றி எந்த அளவு அஹ்மதிய்யா ஜமாஅத்தில் பேசப்படுகிறதோ, நன்றி பற்றிய அறிவு எந்த அளவு ஜமாஅத்திற்கு இருக்கிறதோ அதே அளவு வேறெவருக்கும் இருப்பதில்லை; இருக்கவும் முடியாது என்று நாம் வாதம் செய்து கூற முடியும். ஏனென்றால் உண்மையான நன்றி இறைவனுக்கு செய்வதே ஆகும். இறைவனுடைய திருப்தியைப் பெறுவதற்காக செய்வதாகும். இறைவனுடைய மார்க்கத்தின் முன்னேற்றம், மற்றவர்கள் மீது அதன் தாக்கம் வெளிப்படுமாறு செய்வதாகும்.

இன்று கலப்பற்ற முறையில் ஏதாவதொரு ஜமாஅத் இஸ்லாத்தின் முன்னேற்றத்திற்காக செயல்படுகின்றது என்றால், இஸ்லாத்தின் அழகிய போதனையை உலகின் ஒவ்வொரு மூலை முடுக்கிலும், ஒவ்வொரு பிரிவினரிடமும் பரப்பக்கூடிய முயற்சியில் எல்லா விதமான திட்டங்களையும் தீட்டி இந்தப் பணியைச் செய்கிறது என்றால் அதனை (அஹ்மதிய்யா ஜமாஅத்தைத் தவிர) உலகில் வேறு எந்தவொரு ஜமாஅத்திலும் எந்தவொரு பிரிவினரிடத்திலும் அல்லது எந்தவொரு அமைப்பிடத்திலும் காண முடியாது. மேலும் யாராவது முயற்சிகள் செய்கின்றனர் என்றால், அவர்களின் வெற்றி ஜமாஅத்தின் முயற்சிகள் மற்றும் வெற்றிகளுக்கு எதிரில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இருக்காது. முஸ்லிம் அல்லாதவர்கள் இஸ்லாத்தைப் பற்றி தவறான எண்ணங்களை உள்ளத்திலிருந்து வெளியேற்றுகின்றனர் என்றால், அல்லது இன்று எங்களது உள்ளம் மற்றும் மூளை இஸ்லாத்தைப் பற்றிய தவறான எண்ணங்களிலிருந்து தூய்மையடைந்து விட்டது என கூறுகின்றனர் என்றால், அது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கூட்டங்களில் வந்து தனது எண்ணங்களை தூய்மை செய்வதனாலேயே ஆகும். அல்லது உண்மையான இஸ்லாம், அஹ்மதிய்யா ஜமாஅத்தின் கூட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகள் மூலமாகவே தெரிய வருகின்றது.

ஆக, இஸ்லாத்தின் மறுமலர்ச்சிக்காக எந்தப் பணியை ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் தொடங்கினார்களோ, அது இன்றும் ஏறக்குறைய 124 வருடங்கள் கடந்த பிறகும் தொடர்கிறது. தொடர்வது மட்டுமல்ல. மாறாக அல்லாஹ்வின் வாக்குறுதிகள் மற்றும் ஆதரவுகள் வெளிப்படும் காட்சிகளை நாம் பார்க்கின்றோம். அந்த ஆதரவின் காட்சிகள் ஆப்பிரிக்காவின் நாடுகளில் வெளிப்பட்டாலும் சரி, பாலைவனங்களில் வெளிப்பட்டாலும் சரி, தொலைவுகளிலுள்ள தீவுகளில் வெளிப்பட்டாலும் சரி, அரபு நாடுகளில், ஆசிய நாடுகளில், அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவிலுள்ள பொதுமக்களுக்கு இஸ்லாத்தின் அழகிய போதனை பற்றிய தூதினை எட்ட வைத்து, அவர்களது சந்தேகங்களை அகற்றுவதற்காக இருந்தாலும் சரி, அல்லது ஐரோப்பா மற்றும் அமெரிக்காவின் மக்களிடம் இஸ்லாத்தின் அழகிய போதனையை ஒப்புக் கொள்ள வைப்பது தொடர்பாக இருந்தாலும் அங்கும் அல்லாஹ்வுடைய ஆதரவுகள் தென்படுகின்றன.

அல்லாஹ்வின் அருள்களின் இந்த மழை, நம்மை நன்றி செலுத்துவது குறித்து அறியக் கூடியவர்களாகவும், நன்றி செலுத்தக்கூடியவர்களாகவும் ஆக்குகின்றது. அவ்வாறு ஆக்கவும் வேண்டும். மற்றவர்கள் இதனைக் குறித்து கணித்துக் கூட பார்க்க முடியாது.

அஹ்மதிகள் மட்டும் அல்லாஹ்வின் கூற்றாகிய *லஇன் சக்கர்(த்)தும் லஅஸீதன்ன(க்)கும் - நீங்கள் எனக்கு நன்றி செலுத்தினால் நீங்கள் அதிகமாக கருதக்கூடிய நான் வழங்கிய அருள்களை அதிகப்படுத்துவேன்.* அஹ்மதிகள் மட்டுமே இறைவனின் இந்த அறிவுரையைப் புரிந்துள்ளனர்.

நாம் செய்யக்கூடிய இந்தப் பணிகள், இதன் நோக்கம் நம்மை அடையாளம் காட்டுவதற்காக அல்ல. எந்தவொரு தனிப் பெருமையும் இதில் கிடையாது. அதனை வெளிப்படுத்துவதும் கிடையாது. மாறாக, ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது வருகையின் நோக்கத்தினை முன்னெடுத்துச் செல்வதாகும். நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய அழகிய போதனையை உலகின் முன் எடுத்து வைப்பதே நமது பணியாகும். உலகின் முன்

போதனைகளை எடுத்து வைத்து, அன்னார் இறுதி ரஸூல் ஆவார்கள் என்பதைப் பற்றிய அறிவை உலகில் ஏற்படுத்துவதாகும். மேலும் அல்லாஹ்வின் ஏகத்துவத்தை உலகில் நிலைநிறுத்துவதாகும்.

ஆக, எந்தப் பணி இறைவனுக்காக இருக்குமோ, சொந்த பெயரும் பெருமையும் வாங்குவது அதில் இருக்காதோ பிறகு அதன் நல்ல முடிவுகளில் இறைவனுக்கு நன்றி செலுத்துவதும் இருக்குமோ அப்படிப்பட்ட நேரத்தில் நிச்சயமாக அல்லாஹ்வின் உதவியும் ஆதரவும் முன்பை விட அதிகமாகி விடும்.

ஆக, நாம் இந்த விசயத்தை எப்பொழுதும் கண்முன் நிறுத்த வேண்டும். கடந்த நாட்களில் நான் ஐரோப்பாவின் பயணத்தில் இருந்தேன். அங்கு பல்வேறு நிகழ்ச்சிகள் இருந்தன. இதில் முதலாவதாக, ஐரோப்பிய பாராளுமன்ற நிகழ்ச்சி ஒன்று இருந்தது. அது அவர்களது ஆடிட்டோரியத்தில் நடைபெற்றது. 200க்கும் மேற்பட்ட ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல்வேறு நாடுகளின் பாராளுமன்ற உறுப்பினர்கள் வந்திருந்தனர். மேலும் மற்ற அரசியல்வாதிகளும், வழக்கறிஞர்களும், கல்வி அறிவு பெற்ற மக்களும் வந்திருந்தனர். இவர்கள் அனைவரையும் சேர்த்து மொத்தம் 200 பேர் விருந்தினர்களாக வந்திருந்தனர். இதைப் போன்று செய்தித்துறையின் பிரதிநிதிகளும் வந்திருந்தனர். அவர்களிடமும் இஸ்லாத்தின் அழகிய போதனைகளைப் பற்றி கொஞ்சம் கூறுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தது.

பிரஸ் கான்ஃபரன்ஸின் காரணமாக உலகில் நல்ல கவரேஜ் ஏற்பட்டது. இந்த நிகழ்ச்சயை நடத்துவதற்காக U.K. ஜமாஅத் சிறந்த முறையில் செயல்பட்டது. ஆனால் உண்மையில் ஐரோப்பிய பாராளுமன்ற நண்பர்கள் தான் இதனை நடத்தினார்கள். எவ்வாறாயினும் நிகழ்ச்சி மிகவும் சிறப்பாக இருந்தது. U.K. ஜமாஅத்திற்கு இதனைப் பற்றிய கவலையும் இருந்தது. அதற்காக இவர்கள் ஜமாஅத்துகளில் துஆவிற்கான அறிவிப்பையும் செய்து வந்தனர். வழக்கம்போல் அஹ்மதிகளின் துஆ ஒப்புக் கொள்ளப்படுவதை நாம் இந்த நிகழ்ச்சியில் பார்க்கவும், உணரவும் செய்தோம். எனது சிந்தனையின்படி நான் எடுத்துரைத்த விசயங்கள், பொதுவாக நாம் அதனை சாதாரணமாகக் கருதுவோம். ஆனால் சிந்தனை செய்து பார்த்தால், இஸ்லாம் சார்பாக கூறப்படுகின்ற எந்த விசயமும் சாதாரணமாக இருப்பதில்லை. அல்லாஹ் எந்த மார்க்கத்தை முழுமையாக்கியுள்ளானோ, அதன் ஒவ்வொரு விசயமும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். இதனால் தான் இந்த விசயங்கள் கலந்து கொண்டவர்களின் மீது சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனை அவர்கள் வெளிப்படையாகக் கூறவும் செய்திருக்கின்றார்கள். அவர்களிடம் இஸ்லாம் தொடர்பாக இருந்த சந்தேகங்கள் விலகின. அல்ஹம்துலில்லாஹ்!

இதற்குப் பிறகு நான் ஜெர்மனி சென்றிருந்தேன். ஜெர்மனியிலும் இதனைப் போன்று பெரிய நிகழ்ச்சிகள் இருந்தன. அதில் ஒன்று, ஹம்பர்க்கில் பள்ளிவாசல் தொடர்பாக ஒரு நிகழ்ச்சி இருந்தது. அவர்கள் புதிதாக வாங்கிய இடத்தில் இருந்த கட்டடத்தை பள்ளிவாசலாக மாற்றியுள்ளார்கள். ஆரம்பத்தில் உள்ளே கட்டடத்தை மாற்றி பள்ளிவாசல் ஆக்கப்பட்டது. அப்போது அதில் மினாரா போன்றவைகள் இருந்ததில்லை. ஆனால் தற்போது மினாரா போன்றவைகளை கட்டியுள்ளார்கள். இந்த கட்டுமானம் தொடர்பாக ஒரு நிகழ்ச்சி நடைபெற்றது. உண்மையில் இது விருந்தினர்களை வரவழைப்பதற்கான ஒரு சாக்கு ஆகும். எவ்வாறிருப்பினும், இதிலும் பெரிய அளவில் மக்கள் கலந்து கொண்டனர். இஸ்லாத்தின் அழகிய போதனையைப் பற்றி சிறந்த தாக்கத்தை இவர்கள் எடுத்துச் சென்றனர்.

இதனைப்போன்று, ஜெர்மனியில் ஜாமிஆ அஹ்மதிய்யாவின் புதிய கட்டடம் கட்டப்பட்டுள்ளது. இது ஜாமிஆவுக்காக கட்டப்பட்டுள்ளதால் வகுப்புகள், பெரிய அளவில் அஸெம்ப்ளி ஹால், ஹாஸ்டல், டைனிங் ஹால், சமையலறை போன்ற அனைத்தும் இருந்தன. மிகப்பெரிய ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. மிகவும் அழகாக இந்த கட்டடம் கட்டப்பட்டிருந்தது. எவ்வாறிருப்பினும் இங்கும் நன்கு படித்த, கல்வி அறிவு படைத்த மக்கள், பிரஸ், அரசியல்வாதிகள் போன்றோர் வந்திருந்தனர். இங்கும் அவர்கள் மூலமாக இஸ்லாத்தின் போதனைகளைக் கூறிய போது, மாறாக மாணவர்கள் மத்தியல் அறிவுரை கூறும்போது அந்த போதனைகள் வந்தன. அதனை அவர்கள் புரிந்தனர். மிகவும் விருப்பம் தெரிவித்தனர்.

பிறகு இரண்டு பள்ளிவாசல்கள் அங்கு திறக்கப்பட்டன. இங்கு உள்ளூர் மேயர் மற்றும் அந்த ஊரின் கல்வி அறிவு பெற்ற, படித்த மக்கள் வந்திருந்தனர். அன்பு மற்றும் சகோதரத்துவம் பற்றி பேசிக் கொண்டிருந்தனர்.

பள்ளிவாசல் திறப்பு விழாவின் போது பள்ளிவாசலின் அண்டை வீட்டிலிருந்து ஒரு தம்பதியினர் அங்கு வந்தனர். சிறிது நேரம் கழிந்த பிறகு அவர்கள் என்னிடம் வந்து நாங்கள் உங்களுக்கு அன்பளிப்பு வழங்க விரும்புகின்றோம் என்றனர். அன்பளிப்பை வழங்கினர். அத்துடன் நாங்கள் பொதுவாக நல்வாழ்த்துக்களை வெளிப்படுத்துகின்றோம் என்றனர். மேலும் பள்ளிவாசலுக்கான வாழ்த்தையும் கூறினர். அங்கு நிகழ்ச்சியில் என்னுடன் மேயர் சாஹிபும் அமர்ந்திருந்தார். அவர் இந்தப் பகுதியில் பள்ளிவாசல் கட்டப்பட்ட போது மிகவும் அதிகமாக எதிர்ப்பு தெரிவித்த வீடு இதுவாகும். பள்ளிவாசல் கட்டப்பட்டு விட்டால் இது கூச்சல் குழப்பம் ஏற்படும் இடமாகி விடும். ஏனென்றால் முஸ்லிம்கள் இவ்வாறு தான் உள்ளனர் என இவர்கள் கூறி வந்ததாக கூறினார்.

ஆனால் கவுன்ஸில் மற்றும் ஏனைய அண்டை வீட்டினர் இவர்களது சிந்தனையை மாற்றினர். இந்த சமயத்தில் அஹ்மதிகளும் இவர்களுடன் தொடர்பு கொண்டனர். மேலும் இவர்களுக்கு உண்மையான இஸ்லாம் மற்றும் அஹ்மதிய்யத்தின் போதனைகளைப் பற்றி கூறி வந்தனர். இவர்களது கண்ணோட்டத்தில் மாற்றம் ஏற்பட ஆரம்பித்தது. திறப்பு விழாவின் போது பள்ளிவாசல் கட்டப்பட்ட பிறகு அஹ்மதிகளுக்கு என்னென்ன பொறுப்புகள் உள்ளன என்பதை கவனம் செலுத்தியவாறு இஸ்லாத்தின் அழகிய போதனையை எடுத்துரைத்தேன். அதன் மூலம் இவர்களிடம் மேலும் அதிகமான மாற்றங்கள் ஏற்பட்டன. அவர்களிடம் ஒழுக்கமும், கண்ணியமும் இருந்தது. எதிரிகளாய் இருநதவர்களது உள்ளம் உருகுவதை நான் கண்டேன்.

எவ்வாறிருப்பினும், அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மற்றவர்களது தாக்கம் பற்றிய பல்வேறு சம்பவங்களை நான் எடுத்துரைக்க விரும்புகின்றேன். சிலர் என்னைப் பற்றியும் எழுதியுள்ளனர். என்னைப் பற்றிய விசயங்களை நான் முடிந்த அளவுக்கு எடுத்துவிட முயற்சி செய்திருக்கிறேன். ஆனால் சில இடங்களில் என்னைப் பற்றியும் வந்து விடும். நான் எடுத்துரைத்த விசயங்கள் இஸ்லாத்தின் தூதுச் செய்தி ஆகும் என்பது எனக்கு தெரியும். தாக்கம் ஏற்பட்டுள்ளதென்றால் அது இஸ்லாத்தின் தூதுச்செய்தியின் தாக்கமே ஆகும். என்னுடையதல்ல. எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது பிரதிநிதியாக நான் கூறக்கூடிய விசயங்கள் மீது தாக்கம் ஏற்படும். ஏனென்றால் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களுடன் அல்லாஹ் உடைய வாக்குறுதி உள்ளது.

முதலில் ஒரு விமர்சனம் ஆகும். அங்கு ஒரு பிஸப் வந்தார். அவர் பிரஸ் கான்ஃபரன்ஸிலும் வந்திருந்தார். கேள்வியும் கேட்டார். டாக்டர் ஹென்மன் ஹாவார்டு சுவிட்சர்லாந்திலிருந்து வந்திருந்தார். Interfaith International உடைய பிரதிநிதி ஆவார். Refai அமைப்புடைய Feed Assembly உடைய நிறுவனரும் தலைவரும் ஆவார். அவருக்கு அழைப்பு மடல் கொடுக்கப்பட்டிருந்தது. அவர் ஒரு நாள் முன்பு பனிக்கட்டியில் வழுக்கி விழுந்து விட்டார். அவரது கண்கள் வீங்கியிருந்தன. காயங்களும் அதிகமாக ஏற்பட்டிருந்தது. இருந்தபோதிலும் அவர் இந்த நிகழ்ச்சியில் கண்டிப்பாக கலந்து கொள்ள வேண்டும் எனக் கூறினார். பிறகு பயணத்தை மேற்கொண்டு நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

அவர் எழுதுகின்றார்: நடைபெற்ற உரையில் அவர்களது வார்த்தைகளில் மந்திரம் போன்ற தாக்கம் இருந்தது.

மேலும் என்னைப் பற்றி எழுதுகிறார்: மென்மையாக பேசினார்கள். ஆனால் வாயிலிருந்து வெளிவந்த வார்த்தைகள் தனக்குள் மிகப்பெரிய ஆற்றலையும், கண்ணியத்தையும் கொண்டிருந்தது. இதனைப் போன்ற தைரியமிக்க மனிதனை எனது வாழ்வில் நான் பார்த்ததில்லை.

எவ்வாறிருப்பினும் இது இஸ்லாத்தின் அழகைப் பற்றி கேட்டவரது வார்த்தையாகும்.

அடுத்து சுவிட்சர்லாந்திலிருந்து வந்திருந்த ஜப்பானைச் சேர்ந்த புத்த மதத்துடைய பிரதிநிதி ஜார்ஜ் மேலோ கோபேரா அவர்கள், அவர்களை அழைத்து வந்த நண்பர்களிடம், நீங்கள் இந்த முக்கியமான சொற்பொழிவைக் கேட்பதற்கு என்னை அழைத்தீர்கள். இதில் கலந்து கொள்வது, கலீஃபாவை சந்திப்பது என்பது என்னைப் பொருத்தவரையில் மிகப்பெரிய நற்பேறு ஆகும். இதனை என்னால் ஒருபோதும் மறக்க முடியாது. இங்கு எனக்கு மற்ற நாடுகளின் அறிவு படைத்த மக்களை சந்திப்பதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இதற்கு நான் நன்றி செலுத்துகின்றேன் என்று கூறினார்.

பெல்ஜியத்தின் தேசிய பாராளுமன்ற உறுப்பினர் மதிப்பிற்குரிய ஃபாவேடு ஹைதர் இதனை வெளிப்படையாக தெரிவித்துள்ளார். இவர் நமது பழைய அறிமுகமானவர் ஆவார். இவரை ஒருநாள் முன்பு நான் சந்தித்த போது நாம் அவரிடம் மிகவும் பழக்கப்பட்ட மக்களாக ஆகிவிட்டோம். தற்போது நீங்கள் பைஅத் செய்து விட வேண்டும் என்றேன். எவ்வாறிருப்பினும் இவர் முஸ்லிம் ஆவார். முராக்கோ போன்ற ஏதாவதொரு இடத்தை சேர்ந்தவராவார். மிக நீண்ட காலமாக அங்கு வசிக்கிறார். இவர் நல்லதொரு அரசியல்வாதியும் ஆகும். மேலும் பாராளுமன்ற உறுப்பினரும் ஆவார்.

அவர் கூறுகின்றார்: இந்த உரை பாராளுமன்றத்தில் எனக்கு மட்டுமல்ல. மாறாக அனைத்து முஸ்லிம்களுக்கும் பெருமைக்குரிய விசயமாகும். ஏனென்றால் கலீஃபா அவர்கள் நமது தலையை உயர்த்தி விட்டார்கள். இதற்கு முன்பு யாராவது இஸ்லாத்தின் போதனையைப் பற்றி பேசினால் நாம் தலைகளைத் தாழ்த்திக் கொள்வோம். ஏனென்றால் அப்போது சரியான போதனை பற்றிய அறிவு நம்மிடம் இருக்கவில்லை. இன்று இஸ்லாத்தின் போதனை சரியான முறையில் நமக்கு தெரிய வந்துள்ளது.

பிறகு பெல்ஜியத்தின் அமைச்சர் உடைய பிரதிநிதி ஜான்தன் தெபிர் கூறினார்: கலீஃபாவுடைய உரை நம் அனைவரையும் உலுக்கி விட்டது. நாம் இதிலிருந்து பலவற்றைக் கற்றுக் கொண்டோம். இந்த உரை நம் அனைவரிடமும் சிறந்த தாக்கத்தை ஏற்படுத்தியது.

அடுத்து பாராளுமன்ற உறுப்பினர் திரு. மாஸ் கூறுகின்றார்: கலீஃபா அவர்கள் உலகத்திற்கு அமைதிக்கான தூதைக் கொடுத்ததற்காகவும் எங்களுக்கு வழிகாட்டியதற்காகவும் நாங்கள் நன்றி தெரிவித்துக் கொள்கறோம்.

அடுத்து வேறொரு பாராளுமன்ற உறுப்பினர் மிஸ்டர். காட்ஃபிரே புலூம் கூறினார்: கலீஃபாவுடைய சொற்பொழிவு எங்களுக்கு ஒளியை தந்திருக்கின்றது. நான் எனது அனைத்து நண்பர்கள் சார்பாக அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கெள்கிறேன்.

பிறகு நார்வேயிலிருந்து ஒரு பாராளுமன்ற உறுப்பினர். இவர் கிறிஸ்டின் டெமோ கிரஸி பார்ட்டியின் மாநிலச் செயலரும் ஆவார். அவரும் இதுபோன்ற கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார்.

பிறகு பிரான்ஸ் அரசாங்கத்தின் சார்பாக உள்துறை மற்றும் வெளியுறவுத் துறை உடைய பிரதிநிதியாக மிஸ்டர் எரிக் கலந்து கொண்டார். அவர் உரையின் அனைத்து முக்கிய கருத்துக்களைக் குறிப்பு எடுத்துக் கொண்டார். மேலும் சொற்பொழிவில் பிரான்ஸிற்கு பல வழிகாட்டல்கள் உள்ளன என்றும் இதனை நான் திரும்பிச் சென்றதும் மினிஸ்டரியில் இதனைப் பற்றிய அறிக்கையை வழங்குவேன் என்றும் கூறினார். ஐரோப்பாவில், பிரான்ஸில் தான் அதிகமாக முஸ்லிம்களுக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பப்படுகின்றன. அவருக்கு முன்பாக கூறப்பட்ட சரியான போதனையினால் அவர் தாக்கத்திற்கு ஆளானார்.

பிறகு லோபியே லோபேஸ் சாஹிபா ஸ்பெயினின் பாராளுமன்றத்தில் உறுப்பினர் ஆவார். ஸ்பெயினிலிருந்து இதில் கலந்து கொள்வதற்காக வந்திருந்தார்கள். தொலிதோஸி மாநிலத்தைச் சேர்ந்தவர் ஆவார். கூறுகின்றார்கள்: இந்த நிகழ்ச்சியில் நட்பு, சகோதரத்துவத்திற்கான போதனைகள் அடங்கியிருந்தன. தொடர்ச்சியாக ஆக்கப்பூர்வமான பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு ஜமாஅத்தைப் பற்றிய அறிவை இந்த நிகழ்ச்சி தந்துள்ளது. மிர்ஸா மஸ்ரூர் அஹ்மதுடைய தலைமையின் கீழ் எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகையில்லை என்ற மோட்டோவின் அடிப்படையில் பல்வேறு சமுதாயங்களுடன் தொடர்பு கொண்டுள்ள அஹ்மதிகள் தமக்குள் ஒன்றிணைந்து விட்டனர். உலகம் தனது போதையில் மூழ்கிக் கொண்டே செல்கின்றது. இந்த வேளையில் அமைதி மற்றும் அன்பிற்கான செய்தியே முக்கியமானதாகும். இப்படிப்பட்ட உலகத்தில் உங்களைப் பற்றி அறிந்து கொள்வது ஒரு பெருமைக்குரிய விசயமாகும். மேலும் உங்களுடைய சிந்தனைகளுக்கு நானும் ஆதரவு அளிக்கின்றேன் என்றும் கூறியுள்ளார். உலக அளவிலான மறுமலர்ச்சி மற்றும் உலகில் அமைதியை நிலைநாட்டுவது போன்ற அனைத்து விசயங்களையும் ஏற்றுக் கொள்கின்றேன். நான் மத அடிப்படையில் அநீதியிழைப்பதனை எப்பொழுதும் எதிர்த்து வருவேன் என கூறியுள்ளார்.

அடுத்து ஸ்பெயினைச் சேர்ந்த ஜோஸ் மாரியா அவன்ஸ்ஸோ. இவர், மெடிரேட்டில் பாப்புலர் பார்ட்டியின் உள்ளூர் அஸெம்ப்ளி உடைய பிரதிநிதி ஆவார்கள். இவரது தொடர்பு கன்டாவாரியா ஸ்பெயின் ஆகும். கூறுகின்றார்கள்: நான் ஏனைய அனைத்து அஹ்மதிகளையும் சந்தித்தேன். (முதலில் என்னை சந்தித்து பிறகு தாக்கத்தை வெளிப்படுத்தினார்கள்.) மேலும் மற்ற அனைத்து அஹ்மதிகளை சந்திக்கும் போதும் கலீஃபாவை சந்திக்கும் போதும் எனக்கு ஏற்பட்ட அதே உணர்வுதான் உள்ளது. முழு ஜமாஅத்தும் சிறந்த விருந்தோம்பல் செய்யக் கூடியவர்களும் அமைதியாளர்களும் ஆவார்கள். கலீஃபாவுடைய கூற்றிற்கேற்ப மதங்களின் நோக்கம் மனிதர்கள் மத்தியில் கஷ்டங்களை அதிகப்படுத்துவது கிடையாது. மாறாக அன்பை அதிகரிப்பதாகும்.

சேன்டியாகோ காட்டாலா சாஹிபா. இவர் குவன்ஸா அல்லது குவன்கா யுனிவர்சிட்டியல் Law Professor ஆவார். பல்வேறு நூல்களை எழுதியுள்ளார்கள். அதில் இஸ்லாம் இன் வில்லன்ஷியா, இஸ்லாமிக் ஜூரிஸ்புருடென்ஸ் போன்றவை அடங்கும். இவர் கூறுகின்றார்: எனது இந்த வார்த்தைகளை கலீஃபா வரை எட்ட வையங்கள். மேலும் இரவு விருந்தின் போது சந்தித்த இமாம் சாஹிப் மற்றும் நம்முடன் இருந்த ஸ்பெயினின் சகோதரர்களுக்கும் என் சார்பாக நன்றி கூறுங்கள். நான் உங்கள் அனைவரையும் சந்தித்ததற்கு இறைவனுக்கு நன்றி கூறிக் கொள்கின்றேன். மேலும் இறைவன் நாம் மீண்டும் சந்திப்பதற்கான வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவான் என நம்பிக்கைக் கொள்கிறேன்.

மேலும் கூறுகின்றார்: இறைவன் உங்கள் மீது பெரிய அளவில் கருணை காட்டியுள்ளான். இறைவனுடைய பெயரால் நானும் நன்மையை நாடுகின்றேன். இறைவன் உங்களுக்கு செல்வத்தையும், அமைதியையும் வழங்க நான் இறைஞ்சுகின்றேன்.

கூறுகின்றார்: நான் மதவாதி ஆவேன். நானும் சில ஆன்மீக அனுபவங்களைப் பெற்றுள்ளேன். ஒரு நீண்ட காலமாக இப்படிப்பட்ட ஒரு மார்க்கச் சூழலைப் பார்க்கவேயில்லை. ஆன்மீகவாதி நேரான வழியில் இருப்பவர் ஆவார் என்பதை நாம் அறிவோம். இறைவனுடன் அவரும், அவருடன் இறைவனும் இருப்பான்.

பிறகு ஸ்பெயினிலிருந்து ஒரு பெண் வக்கீல் கலந்து கொண்டார். அவர் திரும்பிச் சென்ற பிறகு அனுப்பிய தூது இதுவாகும். ஸ்பெயினிலிருந்து அவருடன் வந்த ஓர் அஹ்மதி நண்பர் சாஹிப், அவரிடம், இந்த நாள் அற்புதமான நாளாக இருக்கும் என்றார். நிச்சயமாக அவர் கூறியது தவறாகவில்லை.

இறைவன் நாடினால் உங்களது ஜமாஅத் செய்த பணிகள் கண்டிப்பாக பலன் தரும் என நான் நம்புகின்றேன் என்றார்கள். ஸ்பெயின் எப்படிப்பட்ட நாடு என்றால் ஒரு காலத்தில் அங்கு இஸ்லாம் இருந்தது. இன்று எந்த அளவு இஸ்லாத்தின் மீது வெறுப்பும் எதிர்ப்பும் உள்ளதென்றால், அதன் உச்சத்தை அடைந்து விட்டது. சில பகுதிகளில் எல்லை மீறி விட்டது.

பிறகு மால்டாவிலிருந்து (மால்டா ஒரு நாட்டின் பெயராகும்) புரொஃபொஸர் ஆல்னெர் கஸோலா சாஹிபும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். யுனிவர்சிட்டி மால்டாவில் புரொஃபொஸர் ஆக பணியாற்றுகின்றார். மால்டி லிட்ரேச்சர் கற்றுக் கொடுக்கின்றார். 30க்கும் மேற்பட்ட நூல்களின் எழுத்தாளர் ஆவார். மால்டாவில் மூன்றாவது அரசியல் பாட்டியின், மால்டா கரின் பார்ட்டி உடைய Co-Founder ஆவார். பல வருடங்களாக கிரின் பார்ட்டியின் தலைவராக இருந்து வந்தார். இவருக்கு இட்டாலியன் பாராளுமன்றத்தில் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த பெருமையும் உண்டு.

இவர் தனது கருத்தை எடுத்துரைத்தவாறு எழுதுகிறார்: கான்ஃபரன்ஸ் உடைய ஏற்பாடு மிகவும் உயர்வானதாக இருந்தது. எங்கும் எதிலும் குறைகள் தென்படவே இல்லை. அஹ்மதிய்யா ஜமாஅத்தின் உலகளாவிய சகோதரத்துவத்தின் எண்ணம் மற்றும் எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகையில்லை என்ற மோட்டோ மிகவும் முக்கியமானதாக கருத வேண்டிய சிந்தனை ஆகும். இது அனைத்து மனித இனத்தையும் ஒன்றுசேர்த்து விடுகின்றது. எல்லாவிதமான இன, மத, வேறுபாடுகளைக் களைந்து மனித குலத்தை ஒன்றுபடுத்துவதற்கு உத்திரவாதம் அளிக்கின்றது. கலீஃபா உடைய உரை உலக அளவில் அமைதியை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய முயற்சிகளின் தெளிவான விளக்கமாகும். உண்மையில் அஹ்மதிய்யா ஜமாஅத் உலகில் அமைதியைத் தேடும் அனைத்து மக்களுக்காக கருத்துப்பரிமாற்றம் செய்வதற்கு

ஒரு முக்கியமான வழியினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. எந்த அளவுக்கு என்றால், அரசியல் ரீதியிலும் இந்த விசயத்தை மிகவும் சிறந்த முறையில் வெளிப்படுத்துகின்றது.

பிறகு மால்டாவிலிருந்து வந்திருந்த மற்றொரு விருந்தினர் ஜவான் பர்தோலோ சாஹிப். இவர் மீடியாவைச் சார்ந்தவராவார். இவர் டி.வி.யில் இரண்டு நிகழ்ச்சிகளின் தயாரிப்பாளரும் ஆவார். இவருக்கு ஜமாஅத்துடன் அறிமுகம் இவ்வாறு நடைபெற்றது. பிரசுரம் கொடுப்பதற்கான திட்டம் ஆரம்பிக்கப்பட்ட போது, அங்கு பிரசுரம் இவருக்கும் கிடைத்துள்ளது. பிறகு அதன் மூலம் சிறந்த தாக்கத்திற்கு ஆளானார். அவர், தானே ஜமாஅத்தைத் தொடர்பு கொண்டுள்ளார். இந்தத் தொடர்பு வளர்ந்து கொண்டே சென்றது.

அவர் கூறுகின்றார்: அமைதியை நிலைநாட்டுவதற்கான உங்களது விலை மதிப்பில்லா சேவைகளை நான் பாராட்டுகின்றேன்.

மேலும் என்னைப் பற்றி அவர் கூறுகின்றார்: நான் அவர்களைப் பற்றி படித்ததை விட பல மடங்கு அதிகமாக அவர்களிடம் நான் பார்த்தேன். உங்களது தூது நிலையானதாகும். உங்களது தூது சரியான மக்கள் வரைக்கும் வந்துள்ளதைக் கண்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன். அமைதி மற்றும் உலகளாவிய சகோதரத்துவத்திற்கான உங்களது முயற்சிகள், உங்களது கொள்கைகள் உங்களது கடின உழைப்பினைக் கண்டு நான் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகியுள்ளேன்.

பிறகு அவர் தனது ஒரு சம்பவத்தை எழுதுகின்றார்: அங்கு ஸ்பெயினில் தனது பெண் நண்பரைச் சந்தித்த போது நான் இங்கு நிகழ்ச்சி உள்ளது. அதனால் தான் வந்துள்ளேன் என்ற போது, அதற்கு அவர் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நிகழ்ச்சிகள் அவ்வளவு Organise ஆக இருக்காது என்றார். இல்லை! இல்லை!! இது அஹ்மதிய்யா ஜமாஅத்தின் நிகழ்ச்சி ஆகும் என்ற போது, அதற்கு அந்தப் பெண் ஆமாம்; நான் அவர்களை அறிவேன். அவர்களது நிகழ்ச்சி எப்போதும் Organised ஆனதாகத்தான் இருக்கும் என்றார்.

ஐரோப்பாவின் மிஸ்டர் கிறிஸ்டின் மேரோம் கலந்து கொண்டார். இவர் Church of Scientology உடைய உறுப்பினர் ஆவார். இவர் தனது கருத்தைக் கூறியுள்ளார். இது மிகவும் முக்கியமான கூட்டமாக இருந்தது. கலீஃபா அவர்கள் தனது சொற்பொழிவில் நம் அனைவருக்கும் நாம் அனைவரும் இணைந்து அமைதிக்காகப் பாடுபட வேண்டும். பரஸ்பரம் உள்ள வெறுப்பைக் களைய வேண்டும் என்ற தூதைக் கூறினார்கள். அவர்களது தூது ஞானம் நிறைந்திருந்தது. வருங்காலத்தில் மனிதரின் சிறந்த எதிர்காலத்தின் உத்திரவாதம் இந்த தூதின்படி அமல் செய்வதனால் தான் இருக்கின்றது.

அடுத்து பிரான்ஸின் ஒரு பகுதி மோட்லி ஜோலி உடைய துணைஅமீர் கடந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். கூறுகின்றார்: இந்த சொற்பொழிவு எனக்கு மிகவும் விருப்பமாக இருந்தது. அவர்கள் மாபெரும் சொற்பொழிவை நிகழ்த்தினார்கள். அனைத்து விசயங்களையும் தெள்ளத் தெளிவாக கூறிவிட்டார்.

பிரான்ஸின் யுனிவர்சிட்டியின் புரொஃபொஸர் மிஸ்டர் மார்க்டிட் தயானியும் இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். கூறுகின்றார்கள்: நான் நற்பேறு பெற்றவன் ஆவேன். கலீஃபாவுடைய தலைமையில் ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நடைபெறக்கூடிய கூட்டத்தில் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. நான் ஒரு உண்மையான அமைதியை நாடக்கூடிய மனித உரிமையின் தலைவர் மற்றும் மத சுதந்திரத்தை உண்மையாக விரும்பக் கூடிய ஒருவருடன் இருப்பது எனக்கு பெருமை மற்றும் அருளுக்குரியதாகும். நான் அமைதி மற்றும் பரஸ்பரம் தொடர்பு கொண்டுள்ள ஒரு மாபெரும் தலைவரை சந்தித்தது எனக்கு பெருமைக்குரிய விசயமாகும். எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகையில்லை என்ற இழக்கம் மிகவும் சக்திவாய்ந்ததும் உலகளாவிய அமைதிக்கு உத்திரவாதம் அளிக்கக் கூடியதுமாகும். இந்த முழக்கம் என்னை மிகவும் தாக்கத்திற்கு ஆளாக்கியது. கலந்து கொண்ட அனைவருக்கும் மிகுந்த கண்ணியம் கிடைத்தது. மக்கள் எந்த அளவு வந்தனர் என்றால் வெளியிலும் நின்று கொண்டிருந்தனர்.

பிறகு நுன்ஸ்பீட் உடைய முன்னாள் மேயர் தஸ்ராத்யேன் எழுதுகின்றார்: முதலில் அழைத்ததற்கு நன்றி தெரிவித்துள்ளனர். அங்கு கணவன் மனைவி இருவரும் வந்திருந்தனர். நாங்கள் இந்த நிகழ்ச்சியினால் சிறந்த

தாக்கத்திற்கு ஆளானோம். இதுபோன்ற நிகழ்ச்சிகளை நடத்துவது இன்றைய நாட்களில் அநீதி மற்றும் தீவிரவாதத்தை விரும்பக்கூடியவர்களுக்கு தகுந்த சிறந்த பதிலாகும்.

பிறகு கூறுகின்றார்கள்: அமைதியைப் பற்றிய இந்த தலைப்பு ஐரோப்பிய பாராளுமன்றத்தின் அஜண்டாவில் ஒன்றாக இருந்தது. எனவே இந்த விசயத்தின் பக்கம் இனிமேல் கவனம் ஏற்பட்டுக் கொண்டேயிருக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. எவ்வாறாயினும் இந்த நிகழ்ச்சியின் மூலமாக கலந்து கொண்டவர்கள், பேச்சாளர்களின் உணர்வு அதிகரித்துள்ளது.

மிஸ்டர் சார்லஸ் டென்னாக் எம்.இ.பி. கூறினார்: அஹ்மதிய்யா முஸ்லிம் கம்யூனிட்டி உலகளவில் அமைதியை பரப்புகின்றது. தீவிரவாதத்திற்கு எதிராக போராடுகின்றது. இங்கு வருவதற்கு முன்பு வெற்றிகரமான பிரஸ் கான்ஃபரன்ஸும் நடைபெற்றது. அந்த நிகழ்ச்சிக்கு அரை மணி நேரத்திற்கு முன்பு பிரஸ் கான்ஃபரன்ஸும் நடைபெற்றது. அங்கு எந்த வகையில் கேள்வி பதில் நடைபெற்றது என்றால், நான் தனிப்பட்ட முறையில் அதன் மூலம் சிறந்த தாக்கத்திற்கு ஆளானேன். முஸ்லிம்களின் தலைவர்களிடமிருந்து இப்படிப்பட்ட தூதுச் செய்திகள் உலகத்திற்கு தேவையாக உள்ளது. இந்த அமைதிக்கான தூது உண்மையில் நமது உள்ளத்தின் ஓசை ஆகும். இதற்கு இஸ்லாத்துடன் மட்டும் அல்ல. மாறாக, மற்ற மதங்களைச் சார்ந்தவர்களுடனும் தொடர்பு இருக்கிறது.

அவர் கூறினார்: அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் ஒவ்வொரு நாளும் முன்னேற்றம் அடைந்து கொண்டே செல்கின்றது. இவர்களது கிளை ஒவ்வொரு பெரிய கண்டத்திலும் உள்ளது. அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உடைய போதனையை மிகவும் குறைவான மக்களே அறிவார்கள். இந்த ஜமாஅத்தின் அடிப்படைக் கொள்கைகளை ஐரோப்பாவில் பரப்புவது நமது கடமையாகும். இது எல்லாரிடத்தும் அன்பு; எவரிடத்தும் பகையில்லை என்ற குறிக்கோளைக் கொண்டுள்ளது. இது அமைதிக்கான தூது ஆகும். இந்த அமைதிக்கான தூது முஸ்லிம்கள் மத்தியில் மட்டுமல்ல. மாறாக உலகிலுள்ள அனைத்து மதங்களுக்கு மத்தியிலும் இது அமைதிக்கான தூது ஆகும்.

பிறகு கூறுகின்றார்: இன்றைய நாட்களில் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் உலகில் அமைதி மற்றும் சகிப்புத்தன்மைக்கு ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கின்றது. மறுபுறம் அநீதி மற்றும் தீவிரவாதத்தை விரும்புபவர்கள் அமைதி மற்றும் நல்லிணக்கத்தற்கு அச்சுறுத்தலாக விளங்குகின்றனர். இந்த மதத் தீவிரவாதம் உலக அளவில் நடைபெறக்கூடிய தீவிரவாதத்துடன் இணைந்து விடுகின்றது.

பிறகு கூறுகின்றார்: முஸ்லிம்கள் இந்த தீவிரவாதத்திற்கு பதில் கூற வேண்டிய அவசியம் உள்ளது. தற்போது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இந்தத் தீவிரவாதத்திற்கு எவ்வாறு பதில் கொடுக்கின்றதோ அதுபோன்று கொடுக்க வேண்டும்.

பிறகு அவர் சொற்பொழிவில் ஏற்பட்ட தாக்கத்தைப் பற்றி கூறுகின்றார்: உங்களுடைய அறிவு செறிந்த விரிவான கருத்துக்களை உடைய சொற்பொழிவிற்கு நான் நன்றி கூறிக் கொள்கின்றேன். நீங்கள் உங்களது சொற்பொழிவில் பல்வேறு விசயங்களை எடுத்துரைத்தீர்கள். நீங்கள் அமைதி மற்றும் சகிப்புத்தன்மை குறித்த உண்மையான இஸ்லாமிய போதனையை எடுத்துரைத்துக் கவனமூட்டினீர்கள். முன்னேற்றம் அடைந்த நாடுகள், ஏழை நாடுகளுக்கும் வளர்ந்து வருகின்ற நாடுகளுக்கும் உதவி செய்ய வேண்டும் என்றும் கூறினீர்கள்.

மேலும் மேற்கத்திய நாடுகள் குறிப்பாக ஐரோப்பிய யூனியன் நாடுகளின் பொறுப்புகள் குறித்தும் கூறினீர்கள். இதனை அவர்கள் சிந்தனையுடனும் அனுதாபத்துடனும் செய்திருக்க வேண்டும். மேலும் எனக்கு இந்த விசயம் மிகவும் ஆச்சரியமாக இருக்கின்றது. நீங்கள் அச்சமின்றி தைரியமாக இமிக்ரேஸன் தொடர்பாக வரக்கூடிய பிரச்சனைகளைக் குறித்து நீங்கள் சொற்பொழிவு ஆற்றியுள்ளீர்கள். அரசியல்வாதி என்ற ரீதியில் இது நமது நாட்டின் மிக முக்கிய பிரச்சனை ஆகும் என்பதை நான் அறிவேன்.

அவர் கூறினார்: எனது சிந்தனையின்படி நாம் மற்றவருடன் ஒத்துப்போவது, ஒருவர் மற்றவருக்காக சகித்துக் கொள்வது இன்றைய மிக முக்கியமான செய்தி ஆகும். இதனை எடுத்துக் கொண்டு நாம் இங்கிருந்து செல்ல வேண்டும்.

ஸ்டோனியாவைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் மிஸ்டர் டு ரைட் கேலியும் தனது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்கிறார். இன்றைய நாட்களில் ஒவ்வொரு நாளும் பரவிக் கொண்டே செல்லக்கூடிய தீவிரவாதத்தை உங்களது ஜமாஅத் முற்றிலுமாக மறுக்கின்றது. பல்வேறு மதங்களை கொள்கைகளை ஒன்றிணைப்பதற்காக உங்களது முன்மாதிரி பார்ப்பதற்கு மட்டுமல்ல. செயல் அடிப்படையிலும் இந்த தூதுச் செய்தியைப் பரப்புவதற்கு ஊக்கம் அளிப்பதற்கு நம்மிடத்தில் நல்ல வாய்ப்பு உள்ளது. ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர்களும் இந்த தூதுவில் அங்கம் வகிப்பது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது.

பிறகு கிளவுடு மோரியா M.E.P. இவரும் பாராளுமன்ற உறுப்பினர் ஆவார். அவர் கூறினார்: பொதுவாக ஐரோப்பிய பாராளுமன்றத்தில் நடைபெறக்கூடிய கூட்டங்களில் இன்று பார்ப்பது போல் கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கை இருப்பதில்லை. அவர் கூறுகின்றார்: உலகின் நிலை மிகவும் மோசமான நிலையில் சென்று கொண்டிருக்கின்றது. நாம் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் அமைதி மற்றும் சமாதானத்தின் கருத்துக்களை கடைபிடிக்க வேண்டிய அவசியம் உள்ளது. ஒருவர் மற்றவருடன் சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்வது மற்றும் கண்ணியத்துடன் நடந்து கொள்வது மிகவும் அவசியமாகும். இந்தக் கருத்து வெறும் புத்தகங்களில் எழுதப்பட்டவை கிடையாது. மாறாக இன்றைய காலத்தில் இதன்படி செயல்படுவது மிகவும் அவசியமானதாகி விட்டது.

அவர் என்னைப் பற்றி கூறுகின்றார்: அவர்கள் இங்கு வருவது மக்கள் ஒருவர் மற்றவரைப் பற்றி தெரிந்து கொள்ள விரும்புகின்றார்கள் என்பதைப் பற்றிய அடையாளம் ஆகும். என்னுடைய சிந்தனையின்படி அஹ்மதிய்யா ஜமாஅத்தைப் பற்றி இன்னும் அதிகமாக தெரிந்து கொள்வது அவசியமாகும். அவர்களுடைய அமைதி மற்றும் ஒருவர் மற்றவருடன் பகிர்ந்து கொள்ள வேண்டிய சகிப்புத்தன்மை பற்றிய கருத்துக்களையும் தூதுச் செய்திகளையும் புரிந்து கொள்வது அவசியமாகும். இதனைத் தவிர மத வேறுபாடு இல்லாமல் மனித இனத்திற்கு தொண்டாற்றுவது இந்த ஜமாஅத்தின் சிறப்பம்சமாகும். இந்த அனைத்து விசயங்களைப் பற்றி இன்னும் அதிகமாக தெரிந்து கொள்வது அவசியமாகும்.

அங்கு பல்வேறு பிரஸ்களைச் சேர்ந்தவர்களும் வந்திருந்தனர். அதில் B.B.C. News, Faith Matters Space Spanish Media, இக்வி யூரோப்பா, மூன்றாவதாக மால்டாவுடைய பிரசித்தி பெற்ற ஜியோ டி.வி. டெய்லி ஐஸ்உடைய பிரதிநிதியும், பாராஸ் மேகஜின் உடைய பிரதிநியும் வந்திருந்தனர். அல்மனார் ரேடியோ பெஜியம் இருந்தது. டர்கிஷ் மீடியா ஹப் ஹபர்டு இருந்தது. பிரெஞ்ச் அகாடமி ரிஸர்சர் Owner the Justice First of the World, Haker News U.K புக்காரும் இருந்தது. இதனைப் போன்று பாகிஸ்தான் எக்ஸ்பிரஸ் நியூஸ் வந்திருந்தது. இதனைத் தவிர U.K பாராளுமன்றத்தின் Official Photographer, பெல்ஜியத்தின் டி.வி., ரேடியோ உடைய பிரதிநிதிகள் மேலும் பல நாடுகளைச் சேர்ந்த மீடியாக்களின் பிரதிநிதிகளும் அங்கு வந்திருந்தனர். CNN –ம் ஒரு பகுதியை ஆதாரமாக தனது இணையதளத்தில் மேலே கொடுத்துள்ளது. அதன் கூற்று A quote of the day அது மிகவும் பிடித்திருந்தது. அதில் ஒன்றாக வேண்டும் என எழுதப்பட்டிருந்தது.

ஜெர்மனியின் தேசிய பாராளுமன்ற உறுப்பினர் தனது தாக்கத்தை வெளிப்படுத்தியவாறு கூறுகின்றார்: சொற்பொழிவு மிகவும் தாக்கம் நிறைந்ததாக இருந்தது. அது மிகவும் ஆழமான விளைவை ஏற்படுத்தியது. இதனை அவர் ஒருவேளை ஹம்பர்க்கில் கூறியிருந்தார் என நினைக்கின்றேன்.

இவர் என்னைப் பற்றி கூறுகின்றார்: நீங்கள் எவ்வாறு பிரிட்டீஷ் பாராளுமன்றம் மற்றும் அமெரிக்காவின் கேபிட்டல் ஹில் –ல் சொற்பொழிவு ஆற்றினீர்களோ அதே போன்று பெர்லினில் ஜெர்மன் பாராளுமன்றத்திலும் சொற்பொழிவு ஆற்றுவதற்கு நான் முயற்சி செய்வேன் என்று எழுதியுள்ளார்.

ஹேக்கின் டெமிரல் தேசிய அஸம்ப்ளியின் உறுப்பினர். அவர்கள் நான் அங்கு கூறிய விசயங்களைப் பற்றி கூறுகின்றார்: நீங்கள் இன்று எங்களுக்கு வழங்கிய வழிகாட்டல் முழு இஸ்லாமிய உலகத்திற்கும் தேவையான வழிகாட்டல் ஆகும்.

தற்போது ஐரோப்பிய பாராளுமன்றத்திற்குப் பிறகு நடந்தவைகள் பற்றி கூறுகின்றேன். இது பாராளுமன்ற நிகழ்ச்சிக்கு மறுநாள் நடந்ததாகும். செவ்வாய்கிழமை ஐரோப்பிய பாராளுமன்றத்திலும், புதன்கிழமை ஹம்பர்க்கிலும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

இண்டிகிரிசன் ஆபீஸர் தனது கருத்துக்களைப் பற்றி ஓர் அஹ்மதியிடம் கூறினார்கள்: உங்களுடைய கலீஃபா இஸ்லாமிய போதனைகளை மிகவும் அழகிய வடிவில் எடுத்துரைத்துள்ளார்கள். இதன் மூலம் சில தவறான எண்ணங்களுக்கு தீர்வு கிடைத்து விட்டன. இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டது மிகவும் மகிழ்ச்சி அளிக்கின்றது. மேலும் இஸ்லாத்தின் உண்மையான போதனை பற்றி தெரிய வந்துள்ளது. நாங்கள் ஜமாஅத்தின் பிரதிநிதிகளை எங்களது நிகழ்ச்சிகளுக்கு அழைப்போம். இதன் மூலம் நீங்கள் அங்கு வந்து இஸ்லாமிய போதனையை எடுத்துரையுங்கள் என்றார்.

ஹம்பர்க்கின் பகுதியில் ஹர்பர்க்க உடைய கவுன்ஸில் உடைய ஒரு பிரதிநிதி கூறினார்: அவர்கள் எவ்வாறு வார்த்தைகளை எடுத்துரைத்தார்கள் என்றால் அது எங்களது உள்ளத்தை தொட்டது. இதனைப் போன்று எங்களது மதத்தின் எந்தவொரு பிரதிநிதியாலும் செய்ய முடியாது.

பிறகு கூறினார்: கலீஃபா அவர்கள் எவ்வாறு குறிப்பாக இஸ்லாத்தின் விசயங்களை எடுத்துரைத்தார்களோ இஸ்லாத்தின் அழகிய போதனைகளை எடுத்துரைத்தார்களோ, எந்த நாட்டில் இருக்கின்றீர்களோ அதை நேசிக்க வேண்டும் போன்றவை என்னிடத்தில் ஏற்பட்ட இஸ்லாத்தின் புதிய தோற்றமாகும்.

ஒரு பெண்மணி கூறினார்: இது என் தொடர்பான விசயமாகும். இதனால் நான் விட்டு விடுகின்றேன்.

இன்டிகிரியேஸனில் அரசாங்கத்தைச் சேர்ந்த இரண்டு பெண்கள் வந்திருந்தனர். எங்களது எல்லா விதமான அச்சமும் பயமும் விலகி விட்டன. கலீஃபா அவர்கள் தனது சொற்பொழிவில் எல்லா பயத்தையும் அகற்றி விட்டார்கள். ஏனைய முஸ்லிம்களும் இப்படிப்பட்ட எண்ணங்களை கையாள வேண்டும். இஸ்லாத்தின் போதனை மிகவும் அமைதி நிறைந்ததாகும். சுற்றுச்சூழலில் தென்பட்ட பயம் நீங்கி விட்டது.

ஹம்பர்க்கின் ஒரு பகுதியில் அரசாங்கத்தின் Office Head தனது மனைவியுடன் வந்திருந்தார். அவர் கூறினார்: நாங்கள் எவ்வாறு உணர்ந்தோம் என்றால் தேன்களில் தேனீக்கள் இருக்கும். அதற்கு ஒரு ராணியும் இருக்கும். அனைத்து தேனீக்களும் தனது ராணியையே சுற்றி வரும். அதற்காக தனது உயிரையும் அர்ப்பணிக்கும். இதனைப் போன்று உங்களது முழு ஜமாஅத்தும் கலீஃபாவுக்காக பணியாற்றுகின்றது. கலீஃபாவுக்காக தனது உயிரையும் அர்ப்பணிக்கின்றது. முழுமையாக கட்டுப்படுகின்றது.

இந்தக் காட்சியும் மற்றவர்களுக்கு தான் தெரிகின்றது.

இதனைப் போன்று உங்களது கலீஃபாவுடைய நிலைமையும் தேனிக்களின் ராணியைப் போன்றதாகும். ஜமாஅத் எவ்வாறு தனது கலீஃபாவுக்கு கட்டுப்படுகின்றது என்பதைப் பற்றியும் எழுதியுள்ளார்.

அங்கு பிரஸ் உடைய சிலரும் வந்திருந்தனர். சொற்பொழிவுக்கு முன்பாக எந்த நிகழ்ச்சியும் இருக்கவில்லை. அவர்கள் ஜெர்மனி உடைய அமீர் சாஹிபை மட்டும் நேர்காணல் எடுக்க வேண்டியிருந்தது. அவர்கள் என்னிடமும் நேர்காணல் எடுக்க வேண்டும். கேள்வி பதில் நிகழ்ச்சி நடத்த வேண்டும் என்றனர். நானும் இந்த நிகழ்ச்சிக்கு பிறகு நடத்துங்கள் என்றேன். சொற்பொழிவிற்குப் பிறகு நான் அவர்களை எங்கே அழையுங்கள் என்றேன். அப்போது அவர்கள், நாங்கள் எந்த விசயங்களைப் பற்றி கேள்வி கேட்க நினைத்தோமோ அதுவும் எங்களது எண்ணங்களில் இருந்த சந்தேகங்களும் ஆட்சேபனைகளும் இந்த சொற்பொழிவின் மூலம் அகன்று விட்டன. இதன் பிறகு வேறெதுவும் தேவையில்லை என்றனர்.

இஸ்லாத்தின் அழகிய போதனை பற்றி இவர்களுக்கு தெரிய வரும்போதுதான் இஸ்லாம் என்றால் என்ன என்று இவர்களது கண்கள் திறக்கின்றது.

இஸ்லாமிக் கமியூனிட்டி போர்டு உடைய ஒரு பெண் உறுப்பினரும் வந்தார். எனது சிந்தனையின் படி இவர் ஒரு அரபி ஆவார். இவர் யுனிவர்சிட்டியில் இஸ்லாமிக் ரிசர்ச்சில் பணியாற்றுகின்றார். ஜமாஅத் தொடர்பாக ஆரம்பத்தில் மிகப்பெரிய எதிரியாக இருந்தார். ஜமாஅத்திற்கு எதிராகவும் பேசி வந்தார். சில நாட்களாக அவரது நடைமுறை மாறியுள்ளது. அந்த யுனிவர்சிட்டியில் எகிப்தைச் சேர்ந்த நமது புரொஃபொஸர் பணியாற்றுகின்றார். அவர் ஜமாஅத்திற்கு நெருக்கமானவராக இருக்கின்றார். ஒருவேளை அவர் மூலமாக இந்த மாற்றம்

ஏற்பட்டிருக்கலாம். எவ்வாறிருப்பினும், அவர் கூறினார்: எங்களது அனைத்து சந்தேகங்களும் விலகி விட்டன. உங்களது கலீஃபா சாதாரண மனிதர் அல்லர். மிகப்பெரிய தலைவர் ஆவார். அறிவு படைத்த மனிதர் ஆவார். அவர் கூறினார்: நான் கலீஃபாவை நடக்கும் போது பார்த்தேன்; பேசும் போது பார்த்தேன்; தொழும் போதும் பார்த்தேன். முஸ்லிம்களுக்கு இதுபோன்ற ஒரு தலைவர் இருக்க வேண்டும் என இதற்கு முன்பு எண்ணினேன். இன்று நான் அந்த தலைவரை எனது வாழ்வில் பார்த்து விட்டேன்.

ஆக, இதுதான் ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்களது கிலாஃபத்தின் அருள் ஆகும். இந்த அனைத்து சிந்தனைக்குப் பிறகும் கூட, இவர்களை அனைத்தையும் பார்த்த பிறகும் கூட இவர்களின் பார்வை, பார்வை அளவிலேயே இருந்து விடுகின்றது. அவர்கள் ஏற்றுக் கொள்வதில்லை.

ஹர்பர்க் ஊரின் President of Police இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவர் மாவட்டத்தின் முழு பொறுப்பாளர் ஆவார். அவர் கூறினார்: சொற்பொழிவில் இஸ்லாத்தில் அமைதியைக் குறித்து கூறப்பட்ட போதனைகளின்படி நாம் அனைவரும் செயல்பட ஆரம்பித்தால் பிறகு காவலர்களே தேவையில்லாமல் ஆகிவிடும். ஹம்பர்க்கின் இந்த நிகழ்ச்சிக்குப் பரந்த கவரேஜ் கிடைத்தது. ஹம்பர்க்கில் பலன்எக்பார்ட் என்ற பத்திரிகை உள்ளது. இதன் வாசகர்களின் எண்ணிக்கை 5 இலட்சத்து 57 ஆயிரம் பேர் ஆவர். இதுவும் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது. மேலும் மற்றொரு பத்திரிகை பெயில்டு ஆகும். அதனை 7 இலட்சத்து 31 ஆயிரம் பேர் பார்க்கின்றனர். இன்னொரு பத்திரிகை வெயில்ட் கம்பக்ட் இதன் வாடிக்கையாளர்கள் ஒரு இலட்சம் பேர் ஆவர். அடுத்து என்.டி.ஆர் ஆக்சுவல் என்ற பத்திரிகை இதனை 4 இலட்சம் பேர் படிக்கின்றனர். இதனைப் போன்று பல்வேறு பத்திரிகைகளும் ஹம்பர்க் பள்ளிவாசலின் புதுப்பிப்பு விழா மற்றும் அங்கு கொடுக்கப்பட்ட உரையை பற்றியும் தனது கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

ஏஜன் மாநிலத்தின் பாராளுமன்ற எதிர்க்கட்சி தலைவரும் சந்திப்பதற்காக அழைக்கப்பட்டார். அவர் இன்று இஸ்லாமிய உலகில் நடைபெறக்கூடிய மாற்றங்கள், குறிப்பாக அரபு நாடுகளில் ஏற்படக்கூடிய மாற்றங்களை தாங்கள் எந்தக் கண்ணோட்டத்தில் பார்க்கின்றீர்கள் எனக் கேட்டார். மேலும் இதனைப் பற்றி இங்க மிகவும் அதிகமாக விவாதிக்கப்படுகிறது என்றார். இந்த மக்களிடத்திலிருந்துதான் உதவியும் பெறப்படுகின்றது. இந்த மக்களே அங்கு நடக்கக்கூடியவைகளுக்கு பொறுப்பாளியும் ஆவார்கள்.

நான் அவரிடம் கூறினேன்: இன்று உலகிலுள்ள நிலைமை இரவோடு இரவாக ஏற்பட்டதல்ல. அரபு நாட்டில் இதே தலைமை தான் 10, 20 வருடங்களுக்கு முன்பும் இருந்தது. அப்போதும் இந்த சிந்தனையே கொண்டிருந்தனர். அப்போது மாபெரும் சக்திகள் இதன் பக்கம் கவனம் செலுத்தவில்லை. ஏனென்றால் தனக்குரிய முன்னுரிமை மற்றும் பலன்களைப் பெற்று வந்தனர். அங்குள்ள உள்ளூர்வாசிகளுக்கும் இதன் பக்கம் கவனம் ஏற்படவில்லை. ஏனென்றால் அவர்களை தூண்டி விடுவது வெளியிலுள்ளவர்கள் ஆவர். அப்போதும் இந்த தலைமை தான் Corrupt ஆக இருந்தது. தனது மக்களுடன் சரியான முறையில் நடக்கவில்லை. ஆனால் மேற்கத்திய சக்திகளும், இந்த நாடுகளுக்கு உதவி வந்த ஏஜென்ஸிகளும் இவர்களுடன் தொடர்பு கொண்டனர். உண்மையான விசயம் என்னவென்றால் பெரும் சக்திகள் தலைமையை தனக்கு கீழ் வைத்திருந்த போது, தலைமையும் இவர்களது பேச்சைக் கேட்ட போது, அங்கு எந்த விதமான குழப்பமும், கவலையும் ஏற்படவில்லை. ஆனால் அந்த தலைமை இவர்களுக்கு தகுதியில்லாமல் போன போது, அவர்கள் அங்கு ஒரு புரட்சியை ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முயற்சி செய்தனர்.

நான் அவரிடம் கூறினேன். மேற்கத்திய அரசாங்கங்கள் அங்கு அமைதி நிலவ விரும்பினால் அங்கு கலப்பற்ற ஜனநாயகத்தைக் கொண்டு வாருங்கள். ஏனென்றால் ஜனநயாகம் வேண்டுமென்று தானே நீங்கள் கூச்சலிடுகின்றீர்கள். ஏதாவது குறிப்பிட்ட ஒரு மனிதரை விரும்பி நீண்ட காலமாக அவருக்கு ஒத்துழைத்து வராதீர்கள். அவர் எல்லை மீறும் போது சர்வாதிகாரியாக ஆகும் போது அவருக்கு எதிராக நடவடிக்கை எடுப்பது போன்றவை இருக்கக் கூடாது. சர்வாதிகளாக ஆக்குவதும் நீங்கள் தானே! மேலும் அந்த நாடுகள் முன்னேற்றத்திற்கான உயர்வான தரத்தை எட்டும் ரேது அது பிடிக்கவில்லை என்றால் அந்த நாட்டை எந்த அளவு மோசமான நிலையை அடையச் செய்கின்றனர் என்றால், அந்த நாடு செயலிழந்து போய் விடுகின்றது.

ஆக, எந்த நாடுகளில் குழப்பம் உள்ளதோ அங்கு உண்மையாகவே உதவி செய்ய வேண்டும். ஜனநாயகத்தை நீங்கள் ஏற்படுத்த வேண்டுமென்றால் ஏற்படுத்துங்கள். மேலும் பல விசயங்கள் பேசப்பட்டன. அவருக்கு இதனைக் குறித்து பேசுவதற்கு வாய்ப்பு கிடைத்தது.

ஜாமிஆ அஹ்மதிய்யாவின் திறப்பு விழாவும் அங்கு நடைபெற்றது. வார்னர் ஆமண்ட். இவர் ரெட் ஸ்டேட் உடைய தலைவர் ஆவார். அதாவது எந்த ஊரில் எந்தப் பகுதியில் ஜாமிஆ அமைந்துள்ளதோ அதன் தலைவர் ஆவார். அவர் கூறினார்: கலீஃபா அவர்கள் ஆற்றிய உரை எழுதப்பட்ட உரை கிடையாது. மாறாக அது அவர்களின் உள்ளத்தின் எண்ணங்கள் ஆகும். அவர்கள் மாணவர்களிடம் போதனைகளின்படி செயல்பட வேண்டும் என்றும், மக்கள் முன்பு செயல் முன்மாதிரியை நிலைநாட்டுங்கள் போன்றவைகள் மிகவும் அவசியமான சரியான விசயமாகும் என்றும் கூறினார். மேலும் ஒரு மார்க்கத்தின் தலைவராக இருந்த போதிலும், அவர் ஒரு Practical மனிதர் ஆவார்.

அவருடைய இருந்த போதிலும் என்ற வார்த்தைக்கு என்ன அர்த்தம் என்று புரியவில்லை. அவரது சிந்தனைகளின்படி ஒருவேளை செயல்ரீதியாக இருப்பதில்லை. அல்லது செயல்ரீதியாக சொல்வது ஒன்றும், செய்வது மற்றொன்றுமாக இருக்கும் என்று கூறுகிறாரா என்பது பற்றியும் தெரியவில்லை.

எவ்வாறிருப்பினும் உல்ப் வோல்தர் சாஹிப் இவர் ஜெர்மனியைச் சேர்ந்தவர். இவர் இஸ்லாமிக் கான்ஃபரஸ் உடைய செயலர் ஆவார். அவர் கூறினார்: அவரும் ஜாமிஆ உடைய திறப்பு விழாவிற்கு வந்திருந்தார். கலீஃபா உடைய வழிகாட்டல் மிகவும் அவசியமானதாகவும் முக்கியமானதாகவும் இருந்தது. அவர்கள் மாணவர்களிடம் ஒரு வழிகாட்டலை விளக்கியவாறு கூறினார். ஏனென்றால் மாணவர்கள் அங்குள்ள சூழலில் வேறுபட்ட ஆடைகளில் தென்படக்கூடியவர்கள் ஆவார்கள். ஆகையால் அவர்கள் நட்பான நடைமுறையைக் கையாள வேண்டும். உளப்பூர்வமாக சந்திக்கக் கூடியவர்களாக இருக்க வேண்டும். இதன் மூலம் அச்சத்தினை குறைப்பதற்கும் காழ்ப்புணர்ச்சியிலிருந்து தப்பிப்பதற்கும் வாய்ப்பு கிடைக்கும். ஒருவர் மற்றவருடன் பேசுவதனாலும், கருத்துப் பரிமாற்றம் செய்வதன் மூலம் தான் இவை நடைபெறும். ஆகையால் இதனைப் பற்றிய கலீஃபா உடைய உரை மிகவும் முக்கியமானதாகும்.

ஒரு ஜெர்னலிஸ்ட் ஹானக் கூறுகின்றார்: எனது கருத்தின்படி உரை மிகவும் சிறந்ததாகவும், நட்புறவு கொண்ட சூழலிலும் நடைபெற்றது. உங்களுடைய உலகளாவிய தலைவரது உரை மிகவும் கருத்துச் செறிவு கொண்டதாகவும் சிறந்ததாகவும் இருந்தது. அவரது வாழ்க்கைக்கு வழிகாட்டும் வார்த்தைகள் அடிப்படை நல்லொழுக்கங்களைப் பற்றி மட்டும் கூறவில்லை. அது என்னிடம் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. ஏனென்றால் அவர்கள் மாணவர்களிடம் உள்ளூர் மக்களிடம் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என திறம்படக் கூறினார்கள்.

ஜாமிஆ அஹ்மதிய்யா உடைய திறப்பு விழாவிற்கும் பிரஸ் மற்றும் எலக்ட்ரானிக் மீடியாவிலும் போதுமான அளவுக்கு கவரேஜ் கிடைத்துள்ளது. பத்திற்கும் மேற்பட்ட பத்திரிகைகளில் இது வந்துள்ளது. அதில் மாநில டி.வி., ரேடியோ போன்றவைகளும் அடங்கும். ஜாமிஆ உடைய போட்டோவும் வந்துள்ளது. பத்திரிகைகள் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது அவர்கள் மாணவர்களிடம் உரையாற்றினார்கள். அதில் இஸ்லாத்தின் அழகினை உலகின் முன் வைக்க வேண்டும். மேலும் அந்த இளைஞர்களிடம் நீங்கள் தங்களைத் தாங்களேஆராயுங்கள். போதனைகளின்படி அமல் செய்யுங்கள். மனித இனத்திடம் சிறந்த முறையில் நடந்து வாருங்கள். அஹ்மதிய்யா ஜமாஅத்தின் முக்கியமான நிபந்தனை சமுதாயத்தில் அமைதியையும் சகிப்புத் தன்மையையும் நல்லுணர்வுகளையும் பரப்புவதாகும் என எழுதியுள்ளனர்.

ஒரு பத்திரிகை எழுதியுள்ளது: அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் எதிர்காலத்தில் ரெட் ஸ்டேட்டில் வருங்கால இமாம்களை உருவாக்குகிறது. பிறகு அங்கு என்னென்ன விசயங்கள் உள்ளன என்பதை சுட்டிக் காட்டியுள்ளது. இவர்களது தலைவர் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது எதிர்கால இமாம்களை நோக்கி ரெட் ஸ்டேட் மற்றும் ஹேசனில் இஸ்லாத்தைப் பற்றிய அச்சத்தை மக்களிடமிருந்து அகற்ற வேண்டும் என கவனமூட்டினார்கள். இஸ்லாம் மற்ற மதங்களுக்கு எதிராகவும் சூழலுக்கு எதிராகவும் போர் புரியவில்லை என எழுதியுள்து. இதுபோன்றே பல்வேறு பத்திரிகைகளின் விமர்சனங்களும் இருந்தன.

அல்லாஹ் நடைபெற்ற அனைத்து நிகழ்ச்சகளை வெகு நாட்கள் வரை நல்ல விளைவைத் தரக்கூடியதாக்குவானாக! மேலும் நாம் எடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியும் முன்னேற்றத்தின் பக்கம் எடுத்து வைக்கும் அடிகளாக இருக்க வேண்டும். அல்லாஹ் நன்றி செலுத்துவதில் தக்வாவில் முன்னேறக் கூடியவர்களாக நம்மை ஆக்குவானாக!

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உங்களது உண்மையான நன்றி தக்வாவும், தூய்மையும் ஆகும். நான் முஸ்லிம் ஆவேன். அல்ஹம்துலில்லாஹ்! என்று கூறுவது மட்டும் உண்மையான புகழ்தலும் நன்றி செலுத்துவதும் ஆகாது. நீங்கள் உண்மையான புகழ் பாடக்கூடிய வழியாகிய தக்வா மற்றும் தூய்மையின் வழியினைப் பின்பற்றினால், நீங்கள் எல்லைப்புறத்தில் நின்று கொண்டிருந்தாலும் யாராலும் உங்களை வெற்றி பெற முடியாது என்ற நற்செய்தியினை நான் உங்களுக்கு வழங்குகின்றேன்.

**பிறகு ஓரிடத்தில் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:**

உண்மையான விசயம் தக்வாவின் திகில் மற்றவர்களின் மீது விழுகின்றது. அல்லாஹ் தனது இறையச்சம் உடையவர்களை வீணாக்க மாட்டான். மனிதன் தக்வாவை கைவிட்டு விடக் கூடாது. தக்வாவின் வழிகளில் தமது பாதங்களை மிகவும் உறுதியாக எடுத்து வைக்க வேண்டும். ஏனென்றால் இறையச்சம் உடையவர்களது தாக்கம் கண்டிப்பாக ஏற்படும். மேலும் அவரது திகில் எதிரிகளின் உள்ளத்திலும் ஏற்படும்.

அல்லாஹ் நம்மை எப்பொழுதும் தக்வாவின்படி செயல்படக் கூடியவர்களாக ஆக்குவானாக! மேலும் தனது அருள்களை வழங்கிக் கொண்டிருப்பானாக!

★ ★ ★ ★ ★

**JUMUA KHUTBA**
**HAZRATH KHALIFATUL MASIH V**
at BAIT-UL-FUTUH MOSQUE, London.
on **21.12.2012**

Translated by : Maulavi N. ZIYAUL HAQ
Published by : MAJLIS KHUDDAMUL AHMADIYYA
ASHURA EAST STREET, MELAPALAYAM,
TIRUNELVELI – 627 005.
TELEFAX : 0462 - 2352456